நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5.

...

ந.க.17750/97/எச்2 நாள்.15.12.97.

## சுற்றறிக்கை

பொருள்: பணிக்குழு-நகராட்சிகள் 30.11.97 முடிய காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை: இவ்வலுவலக சுற்றறிக்கை எண்.17550/97/எச்2 நாள்.10.9.97..

...

நகராட்சிகளில் நகர மன்றங்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பணியிடங்களை 1.11.96 முதல் 31.8.97 முடிய பூர்த்தி செய்து கொள்ளுமாறு ஏற்கனவே பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் அனைத்து நகரமன்றங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் 1.9.97 முதல் ஏற்படக் கூடிய காலிப் பணியிடங்களை கருணை அடிப்படையில் நியமனம் செய்ய பரிந்துரை செய்யும் பொருட்டு பூர்த்தி செய்ய வேண்டாம் என்று அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தற்போது கருணை அடிப்படையிலான நியமனம் குறித்து காத்திருந்தோரின் பெயர் பட்டியல் 30.11.97 முடிய நகராட்சி நிர்வாக ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் அப்பணியிடங்களைத் தவிர மற்ற பணியிடங்கள் நகர மன்றங்களின் மூலம் நியமனம் செய்யக்கூடிய 1.9.97 முதல் 30,11.97 வரை காலியாக உள்ள (அலுவலக உதவியாளர் பணியிடம் தவிர) மற்ற பணியிடங்களை நகராட்சி விதிமுறைகளுக்கு ட்பட்டு, சம்பந்தப்பட்ட நகர மன்றங்களே பூர்த்தி செய்துக் கொள்ளலாம் என அனுமதி அளிக்கப்படுகிறது. கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரால் பரிந்துரை செய்யப்படும் பணியிடங்கள், பரிந்துரை செய்யப்படும் நபர்களைக் கொண்டுதான் நியமனம் செய்யப்படவேண்டும். இதில் எவ்வித விலக்கும் இருத்தல் கூடாது என திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் எதிர்காலத்தில் 1.12.97 முதல் ஏற்படக்கூடிய காலிப் பணியிடங்களை நகராட்சி நிர்வாக ஆணையாளரின் முன் அனுமதியினைப் பெற்றப்பிறகே பூர்த்தி செய்யப்பட வேண்டும் என அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை மறு தபாலில் அனுப்பிவைக்குமாறும் கோரப்படுகிறது.

ஒம்/-வி.பிச்சை,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

பெறுநர்:

அனைத்து நகராட்சி ஆணையர்கள்,

நகல்: அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
கண்காணிப்பாளர்,
கே/ஐபி/ஜே/ட்டிபி பிரிவு
உதிரி.50.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்

17.1